செ.வெ.எண்: 68 நாள் : 31.05.2021

**கோயம்புத்தூர் கொடிசியா கொரோன சிறப்பு சிகிச்சை மையத்தில் 400 ஆக்சிஜன் படுக்கைகளை மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் சிகிச்சை பயன்பாட்டிற்கு துவங்கி வைத்தார்.**

கோயம்புத்தூர் கொடிசியா வளாகத்த்தில் பி-அரங்கில் 400 ஆக்சிஜன் படுக்கை வசதிகளுடன் கூடிய சிறப்பு சிகிச்சை மையத்தினை மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் சிகிச்சை பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.நாகராஜன்,இ.ஆ.ப., அவர்கள் கோயம்புத்தூர் மாநராட்சி ஆணையாளர் திரு,குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ராமதுறை முருகன் அவர்கள் மற்றும் இ.எஸ்.ஐ மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.ரவீந்திரன் அவர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களுக்கு ஏற்பட்டுள்ள தொற்றின் அளவு, வயது மற்றும் மருத்துவரின் பரிந்துரை ஆகியவற்றின் அடிப்படையில், மாநகராட்சி மற்றும் நகராட்சிப்பகுதிகளில் உள்ள டிரையேஜ் மையங்கள் மூலம் அவர்களை சிறப்பு சிகிச்சை மையங்கள், மருத்துவமனைகள், ஆக்சிஜன் படுக்கை வசதிகளுக்கும் என தனித்தனியே பிரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவோர்களுக்கு சிகிச்சையளிக்கும் வகையில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் 4அரசு மருத்துவமனைகள், 26 கொரோனா சிறப்பு சிகிச்சை மையங்கள், 92 தனியார் மருத்துவமனைகள், மற்றும் அவற்றின் கீழ் இயங்கும் 25 தனியார் விடுதிகள் ஆகியவை செயல்பட்டு வருகின்றது.

கொடிசியா அரங்கில் உள்ள 4 பெரிய அரங்கங்களில் சிறப்பான படுக்கை வசதிகள், மருத்துவ கண்கணிப்பு அறைகள் உள்ளிட்டவை அமைக்கப்பட்டு கொரோனா தொற்றால் பாதித்தவர்களுக்கு சிறப்பான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

அதன்படி, கொரோனா தொற்றால் பாதித்தவர்கள் கொடிசியா அரங்கம் **A**-ல் உள்ள 210 படுக்கைகளில் 163 நபர்களும், அரங்கம் E-ல் உள்ள 335 படுக்கைகளில் 170 நபர்களு படுக்கைகளிலும் , அரங்கம் - D-ல் உள்ள 210 படுக்கைகளில் 163 படுக்கைகளிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் ஒவ்வொரு அரங்கத்திற்கும் சிகிச்சையளிக்க ஏதுவாக 9 மருத்துவர்களும், 54 செவிலியர்களும் சுழற்சி முறையில் பணியாற்றி வருகின்றனர்.

இங்கு சிகிச்சை பெறுபவர்கள் கொரோனா தொற்று தீவிரம் அடைந்து ஆக்சிஜன் தேவைப்படும் போது, அருகில் உள்ள இ.எஸ்.ஐ மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு வந்த நிலையில், இந்நிலையினை தவிர்ப்பதற்காக அரங்கம் -**D**ல் கூடுதலாக 400 ஆக்சிஜன் படுக்கை வசதிகள் கொண்ட சிறப்பு சிகிச்சை அரங்கு இன்று தொடங்கி வைக்கப்பட்டது. இம்மையத்தில் இ.எஸ்.ஐ மருத்துவக்கல்லூரி மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்களும், செவிலியர்களுக்கு சுழற்சி முறையில் பணியாற்றுவார்கள்.

தொடர்ந்து சரவணம்பட்டி பகுதியில் உள்ள ரங்கநாதர் பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்ட சிறப்பு சிகிச்சை மையத்தில் 200 படுக்கை வசதிகள், அன்னூர் நவ பாரத் பள்ளயில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்பு சிகிச்சை மையத்தில் 150 படுக்கை வசதிகள், காரமடை பகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்பு சிகிச்சை மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள 250 படுக்கை வசதிகள் என மொத்தம் 1250 படுக்கை வசதிகளையும் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார். மேலும், தொகுப்பூதியம் அடிப்படையில் 12 மருத்துவர்களுக்கான பணி நியமன ஆணையினை மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அவர்கள்வழங்கினார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**